# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாந் தவணைப் பரீட்சை - 2023

| தரம் - 10 | கர்நாடக சங்கீதம் | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................

பகுதி – I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

01. "சிவபெருமானே" என்ற கீதம் அமைந்துள்ள இராகம்.
1) சங்கராபரணம் 2) பிலஹரி 3) மாயாமாளவகௌளை 4) மத்தியமாவதி

02. "தகிட" எனும் சொற்கட்டு அமைந்த நடை.
1) திஸ்ரநடை 2) சதுஸ்ரநடை 3. கண்டநடை 4) மிஸ்ரநடை

03. பின்வருவனவற்றுள் அவனத்த வாத்தியம் எனப்படுவது.
1) நாதஸ்வரம் 2) மிருதங்கம் 3) வீணை 4) தாளம்

04. 'உற்றுமை சேர்வது" என்ற தேவாரம் பாடப்படும் பண்.
1) பழம்பஞ்சரம் 2) செவ்வழி 3) தக்கராகம் 4) செந்துருத்தி

05. திருவிசைப்பபா பாடப்படுவது .
1) இராக தாள முறையிலாகும் 2) இராகமாலிகை முறையிலாகும்
3) சுத்தாங்க முறையிலாகும் 4) பண்ணாங்க முறையிலாகும்

06. விரல்களினால் மீட்டுதல் எனும் தொழிற்பாட்டுடன் ஓசையினை உண்டாக்கும் இசைக்கருவி
1) வீணை 2) புல்லாங்குழல் 3) மிருதங்கம் 4) வயலின்

07. ஹ்ரஸ்வ ஸ்வரங்களின் அட்சரகால எண்ணிக்கை
1) 01 2) 02 3) 03 4) 04

08. ஆதிகாலத்தில தமிழிசைக்குப் பக்க வாத்தியங்களாக பயன்படுத்தப்பட்ட இசைக்கருவி.
1) வயலின், மிருதங்கம் 2) யாழ், குழல்
3) யாழ், நாதஸ்வரம் 4) வீணை மிருதங்கம்

09. ரூபகதாள அங்க அடையாளத்தின் முன் ஒரு லகுவைச் சேர்த்தால் வருவது.
1) ஜம்பைதாளம் 2) மட்டியதாளம் 3) திரிபுடைதாளம் 4) துருவதாளம்

10. பின்வருவனவற்றுள் சபாகான உருப்படிகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதி
1) கீதம், வர்ணம் 2) வர்ணம், ஜதீஸ்வரம்
3) இலட்சணகீதம், பதம் 4) கீர்த்தனை தில்லானா

11. பின்வருவனவற்றுள் தாள சந்தத்துடன் பாடப்படுவது.
1) வெண்பா 2) புராணம் 3) திருப்புகழ் 4) திருவாசகம்

12. அப்பியாசாகான, சபாகானம் இரண்டிற்கும் பொதுவான உருப்படி.
1) வர்ணம் 2) கீதம் 3) தேவாரம் 4) தில்லானா

13. சங்கதிகளும், கடினமான வக்ரப் பிரயோகங்களும் இல்லாத உருப்படி.
1) கீர்த்தனை 2) வர்ணம் 3) ஸ்வரஜதி 4) சஞ்சாரிகீதம்



kalvi.lk

14. நாட்டுப்பாடல் வகைகளைத் தழுவி பாடப்பட்ட பதிகம்.

1) திருவெம்பாவை 2) திருவம்மானை 3) திருநேரிசை 4) திருவாசகம்

15. ஆரோகணத்திலோ அவரோகணத்திலோ அல்லது இரண்டிலுமோ ஸ்வரங்கள் விலக்கப்பட்டு வருதல்.

1) வர்ஜராகம் 2) வக்ரராகம் 3) பாஷாங்கராகம் 4) உபாங்கராகம்

16. சங்ககாலத்திலிருந்த உலகியல் சார்ந்த இசை. பக்தி இசையாக மறுமலர்ச்சி கண்டது.

1) சோழர் காலத்தில் 2) பல்லவர் காலத்தில்

3) நாயக்கர் காலத்தில் 4) வேதகாலத்தில்

17. தேவாரப்பாடல்களை பண் முறையில் பாடிப் பரவச் செய்தவர்கள்.

1) ஆழ்வார்கள் 2) ஓதுவர்கள் 3) வாக்யேகாரர்கள் 4) வைணீகர்கள்

18. குறிஞ்சி ராகம் ஒரு

1) நிஷாதாந்திய ராகம் 2) பஞ்சமாந்திய ராகம்

3) வக்ரஷாடவராகம் 4) தைவதாந்திய ராகம்

19. இந்தியாவின் தேசிய வாத்தியம் எனப்படுவது.

1) புல்லாங்குழல் 2) மிருதங்கம் 3) நாதஸ்வரம் 4) வீணை

20. பஞ்சபுராணம் பாடும் போது திருவாசகத்திற்கு அடுத்தப் பாடப்படுவது.

1) தேவாரம் 2) திருப்பல்லாண்டு

3) திருவிசைப்பா 4) திருத்தாண்டகம்

21. வக்ர ராகத்திற்கு உதாரணம்.

1) மோகனம் 2) பிலஹரி 3) கமாஸ் 4) சுத்தசாவேரி

22. எல்லா ஸ்வரங்களும் கோமள ஸ்வரங்களாக வரும் ராகம்.

1) சங்கராபரணம் 2) தோடி

3) பந்துவராளி 4) மாயாமாளவகௌளை

23. வெண்பா பாடுவதற்கேற்ற இராகம்.

1) சங்கராபரணம் 2) கல்யாணி

3) கரகரப்பிரியா 4) மோகனம்

24. மாயாமாளவகௌளை ராகத்திலேயே அப்பியாச வரிசையைப் பயில வேண்டும் என்ற சம்பிரதாயத்தை ஏற்படுத்திய வாக்கேயர்கள்.

1) பாபநாசம்சிவன் 2) கோபாலகிருஷ்ணபாரதியார்

3) முத்துத்தாண்டவர் 4) புரந்தரதாஸர்

25. தமிழிசையில் “உழை”எனக் குறிப்பிடப்படும் ஸ்வரம்.

1) காந்தாரம் 2) மத்திமம் 3) பஞ்சமம் 4) தைவதம்

26. வீணை வாசிப்பதில் தேர்ச்சி பெற்றவர்களின் சிறப்புப்பெயர்.

1) வைஷ்ணவர் 2) வைணீகர் 3) வைஷியர் 4) வித்துவான்

27. அசல ஸ்வரங்கள்.

1) ஸ, ம 2) ஸ, ரி 3) ஸ, ப 4) ரி, க



kalvi.lk

28. “மாணிக்வாசகர் பேறெனக்குத் தரவல்லாயோ அறியேன்” என்ற கோகிலப்பிரியா இராகக் கீர்த்தனையை பாடிய வாக்கேயகாரர்.

1) கோபாலகிருஷ்ணபாரதியார் 2) புரந்தரதாஸர்
3) பாபநாசம்சிவன் 4) முத்தத்தாண்டவர்

29. ✧, |, || ஆகிய குறியீடுகள் முறையே குறிப்பது.

1) அன்னியஸ்வரம், ஏற்றயாரு, கமஹம்
2) அங்கமுடிவு, கமஹம், அன்னியஸ்வரம்
3) ஆவர்த்தன முடிவு, அங்கமுடிவு, அன்னியஸ்வரம்
4) அன்னியஸ்வரம், அங்கமுடிவு, ஆவர்த்தனமுடிவு

30. ஆலயங்களில் இசை வளர்த்த பெருமைக்காக “விசித்திரசித்த, “சங்கீர்ண” எனும் விருதுகளைப் பெற்ற மன்னன்.

1) இராஜராஜசோழன் 2) மகேந்திரவர்மன்
3) நின்றநீர்நெடுமாறன் 4) இராஜேந்திரன்

**கீழே தரப்பட்டுள்ள அப்பியாச வரிசையினை அடிப்படையாகக் கொண்டு *31 – 32* வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

| | | | |
|---|---|---|---|
| \|5 | O | \|5 | \|5 |
| ஸமகமரி \| | ஸரி \| | கமரீக \| | ஸாரிகம \| |

31. தரப்பட்ட அப்பியாச வரிசையில் ஓர் ஆவர்த்தனம் எடுத்துக்கொள்ளும் மொத்த அட்சர எண்ணிக்கை.

1) 08 2) 10 3) 12 4) 20

32. தரப்பட்ட அப்பியாச வரிசைக்கு அடுத்த ஆவர்த்தனமாக அமையும் வரிசை.

1) ரிகமகரி / ரிக / ரிமகாரி / ரீகமப //
2) ரிபமபக / ரிக / மபகாம / ரீகமப //
3) ரிமகமரி / ரிக / மபரீக / ரீகமப //
4) ரிமகரிக / ரிக / மபகாம / ரீகமப //

33. இவ்வரிசை அமைந்துள்ள தாளம்

1) மிஸ்ரஜாதி துருவதாளம்
2) கண்டஜாதி அடதாளம்
3) கண்டஜாதி துருவதாளம்
4) சதுஸ்ரஜாதி துருவதாளம்

34. தமிழிசையில் நிலை எனப்படுவது.

1) ஸ்வரம் 2) சுருதி 3) லயம் 4) ஸ்தாயி

35. “முன்னம் அவளுடைய நாமம் கேட்டாள்”என்ற தேவாரத்தினை அருளியவர்.

1) நாவுக்கரசர் 2) சம்பந்தர் 3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்



kalvi.lk

36. ஆலயங்களில் அதிகாலையில் பாடப்படுவது.

1) பஞ்சபுராணம் 2) புராணபடனம்

3) திருப்பள்ளியெழுச்சி 4) தேவாரம்

37. வீணையின் தாளத் தந்திகளுள் ஒன்று.

1) ஹெச்சு ஸாரணி 2) ஸாரணி

3) மந்திரம் 4) அனுமந்திரம்

38. ஒரு ராகத்தின் ஸ்வரப் பிரயோகங்களில் நட்சத்திரக் குறியீடு (✧) பயன்படுத்தப்பட்டிருப்பின் அவ்ராகம்.

1) ஜனகராகம் 2) வக்ரராகம்

3) உபாங்கராகம் 4) பாஷாங்கராகம்

39. "சாந்துப் பொட்டு தளதளென்ன" என்ற கண்ணி இடம் பெறும் பாடல்.

1) ஞானக்கும்மி 2) ஞானச்சிந்து 3) லாலி 4) சிதம்பரக்கும்மி

40. திருப்புகழை அருளியவர்.

1) சேக்கிழார் 2) சந்தப்பாவலர் 3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்

(20 x 2 = 40 புள்ளிகள்)

Education கல்வி

## பகுதி II

❖ **முதலாம் வினாவும் வேறு நான்கு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

(01) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

01) முத்துத்தாண்டவர் இயற்றிய பதங்கள் எவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றன.

02) நேத்ர - ஶ்ரீ என்று அழைக்கப்படும் இராகம் எது?

03) ஜன்னிய ராகப் பிரிவுகளின் எண்ணிக்கை யாது?

04) தாளத்தில் ஜாதி பேதமடையும் அங்கம் யாது?

05) தோடி இராகத்தின் நேர்ப்பிரதி மத்திய ராகம் யாது?

06) அப்பியாசவரிசைகளில் அலங்காரத்திற்கு பின் கற்பிக்கப்படும் உருப்படி யாது?

07) தாளக்கட்டுப்பாட்டுக்குள் அடங்கும் உருப்படிகள் எவ்வாறு அழைக்கப்படும்.

08) தாளத்தின் முதல் மூன்று அங்கங்களும் எவ்வாறு அழைக்கப்படும்?

09) சமண சமயத்தைத் தழுவிய மகேந்திரவர்மனையும், நின்ற சீர் நெடுமாறனையும் சைவர்களாக்கிய பெருமைக்குரியவர்களை முறையே தருக.

10) சபாகானத்தில் இடம் பெறும் உருப்படிகள் இரண்டு தருக?

(12 புள்ளிகள்)



kalvi.lk

(02) தோடி இராகத்தின் இலட்சணத்தை விரிவாக எழுதுக.
(உருப்படிகள், சஞ்சாரம் என்பன உள்ளடக்கப்படல் வேண்டும்)

( 12 புள்ளிகள்)

(03) பின்வருவனவற்றுள் விரும்பிய இரண்டினைப் பற்றி விரிவான விளக்கம் தருக.

1) அப்பியாசகானம் 2) சபாகானம் 3) கீதம் 4) திருவிசைப்பா

(6 + 6 = 12 புள்ளிகள்)

(04) 1) வீணையின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.
2) வீணையின் அமைப்பினை விளக்குக.
3) வீணையின் சிறப்புக்கள் இரண்டினைத் தருக.
4) வீணை வாசித்து பிரபல்யமடைந்த இசைக்கலைஞர்கள் இருவரினது பெயர்களைத் தருக?

(4 + 4 + 2 + 2 = 12 புள்ளிகள்)

(05) முத்துத்தாண்டவரின் வாழ்க்கை வலைாற்றினையும் இசைப்பணியையும் பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க.

1) வாழ்க்கைக்காலம்
2) பிறந்த இடம்
3) இளமைக்காலம்
4) வாழ்க்கைச் சம்பவங்கள்
5) இவர் இயற்றிய உருப்படிகள் நான்கு
6) இவரது உருப்படியின் சிறப்புக்கள் இரண்டு

(1 + 1 + 2 + 4 + 2 + 2 = 12 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

(06) 1) ஜனக இராகங்களின் நான்கு இலட்சணங்களையும் தருக.
2) 1. ஜன்னிய இராகம் என்றால் என்ன?
2. அவற்றின் ஏழு பிரிவுகளையும் தருக?
3. ஜன்னிய இராகத்தின் ஏழு பிரிவுகளுள் மூன்றினை உதாரணத்துடன் விளக்குக.

(2 + 1 + 3 + 6 = 12 புள்ளிகள்)

(07) இந்தியாவில் 7ம் 8ம் நூற்றாண்டில் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி பற்றி விரிவாக ஆராய்க.

(12 புள்ளிகள்)



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

Follow and Get papers Daily ..!

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினுாடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page